www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 2.30 மணி

பகுதி - 1

மதிப்பெண்கள் : 100

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. 15 x 1 = 15

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______.
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும் ______ யும் ஓட்டிவிடும்.
   அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
3. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ______.
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
4. கற்றவருக்கு அழகு தருவது ______.
   அ) தங்கம் ஆ) வைரம் இ) வெள்ளி ஈ) கல்வி
5. நம்மை ______ப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை
6. 'பாடறிந்து' - எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.
   அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து
7. கண்ணா வா - என்பது ______த் தொடர்.
   அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை
8. சேரர்களின் தலைநகரம் ______.
   அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
9. விகாரப் புணர்ச்சி ______ வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு
10. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ______.
    அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
11. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ______.
    அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

"எதுகொல் இது மாயை ஒன்றுகொல்
　எரிகொல் மறலிகொல் ஊழி யின்கடை
அதுகொல் என அலறா இரிந்தனர்
　அலதி குலதியொடு ஏங்க லிங்கரே"

12. இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?
    அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலிங்கத்துப்பரணி ஈ) நாலடியார்
13. இப்பாடலை இயற்றியவர் யார்?
    அ) செயங்கொண்டார் ஆ) திருத்தக்கதேவர்
    இ) நல்லந்துவனார் ஈ) சுந்தரர்

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. 'மறலி' - என்னும் சொல்லின் பொருள் ______.

அ) புலி ஆ) யானை இ) காலன் ஈ) கழல்

15. பாடலின் எதுகை அமைந்த சொற்கள் ______.

அ) அதுகொல், இதுகொல் ஆ) அலறா, விங்கரே

இ) மாயை, மறலி ஈ) இது மாயை, இரிந்தனர்

பகுதி - 2

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
(21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4x2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) மாங்கனி நகரம் - என அழைக்கப்படுவது சேலம்.

ஆ) புத்தியைத் தீட்டு பாடலை இயற்றியவர் ஆலங்குடி சோமு ஆகும்.

17. உலகம் எவற்றால் ஆனது?

18. பகத்சிங் கண்ட கனவு யாது?

19. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

20. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக.

21. விடல் - என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க. 5x2=10

22. 'இரவுபகல்' - எவ்வகைத் தொடர்?

23. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

24. விகாரப் புணர்ச்சியின் வகைகள் யாவை?

25. கலைச்சொல் தருக.

அ) Awareness ஆ) Herbs

26. உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) சென்றனர் ஆ) வருக

27. பொருத்தமான நிறுத்தக்குறியிடுக.

தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது.

28. தமிழெண்களை எழுதுக.

62, 45, 18, 37

பகுதி - 3

பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2x3=6

29. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

30. கொங்குமண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

Scanned with CamScanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

31. பத்தியைப் படித்து விடை தருக.

சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது. இவர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது. தொண்டி, முசிறி, காந்தளூர் - என்பன சேரநாட்டின் துறைமுகப்பட்டினங்களாக விளங்கின. சேரர்களின் கொடி விற்கொடி ஆகும்.

1. சேரர்களின் நாடு _______ எனப்பட்டது.
2. சேரர்களின் நகரம் யாது?
3. சேரர்களின் துறைமுகப்பட்டினங்கள் யாவை?

பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 3 = 6
(34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

32. பண்பு, அன்பு - ஆகியவை பற்றி கலித்தொகை கூறுவன யாவை?
33. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
34. "கல்வி அழகே அழகு" - எனும் நீதிநெறி விளக்கப்பாடலை எழுதுக.

பிரிவு - 3

இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 3 = 6

35. இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
36. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
37. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

பகுதி - 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

39. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

40. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக

(மேடுபள்ளம், ஈடு இணை, கல்வி கேள்வி, வாழ்வு தாழ்வு, போற்றிப் புகழப்பட, ஆடி அசைந்து)

அ) சான்றோர் எனப்படுபவர் _______ களில் சிறந்தவர்.
ஆ) ஆற்று வெள்ளம் _______ பாராமல் ஓடியது.
இ) இசைக்கலைஞர்கள் _______ வேண்டியவர்கள்.
ஈ) தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு _______ இல்லை.
உ) திருவிழாவில் யானை _______ வந்தது.

41. மரபுத் தொடருக்கான பொருளை பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) வாழையடி வாழையாக | - | பொய்யுரை |
| ஆ) முதலைக்கண்ணீர் | - | விரைந்து வெளியேறுதல் |
| இ) ஆயிரம் காலத்துப்பயிர் | - | இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது |
| ஈ) கம்பி நீட்டுதல் | - | பரம்பரை பரம்பரையாக |
| உ) கானல் நீர் | - | நீண்ட காலத்திற்கு உரியது |

www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. படம் சார்ந்த சொற்களை எழுதுக.



பகுதி - 5

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகள் யாவை?

44. அ) கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

(அல்லது)

ஆ) காலம் உடன் வரும் - கதையைச் சுருக்கி எழுதுக.

45. கட்டுரை எழுதுக.

அ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

(அல்லது)

ஆ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை)

******

www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com